Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# புறநானூற்றில் அரண்கள்

**சூ.நளினி**
**முனைவர் பட்ட ஆய்வாளர் (முழுநேரம்)**
**தமிழ்த்துறை, மொழிகள் புலம்,**
**வேல்ஸ் அறிவியல் தொழில் நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம்**
**பல்லாவரம், சென்னை - 117.Karthinalini4@gmail.com**

7

**ஆய்வுச் சுருக்கம்**

தேவையின்பொருட்டோ, சுயநலம்சார்ந்தோ போர் நிகழ்தல் காலத்தின் எதார்த்தம். எதிரியின் தாக்குதலில் இருந்து தம்மைக் காத்துக்கொள்ள அமைத்துக்கொள்ளப்படும் பாத்துகாப்பே அரண் ஆகிறது. தொல்காப்பியம்,பதிற்றுப்பத்து, திருக்குறள், மதுரைக்காஞ்சி, புறநானூறு முதலிய நூல்கள் அரண் பற்றி கூறுகின்றன. இயற்கை அரண்கள், இயற்கை – செயற்கை அரண்கள், செயற்கை அரண்கள் என மூவகைப்படுத்துவர். ஒருநாட்டின் அரண்களாக மலையரண்கள், காவற்காடு, ஆறுகள், நிலவரண்கள், கடல். அகழிகள், கோட்டைகள், பொறிகள் மற்றும் காவற்காடுகளில் ஏற்படுத்தப்படும் புதைகுழிகள், தாக்கும்பொறிகள், எந்திரப்புழை முதலியனவும் இதில் அடங்கும்.

**திறவுச்சொற்கள்**

போர் - அரண்கள் - புறநானூறு - திருக்குறள் - இயற்கை அரண்கள் - செயற்கை அரண்கள் - மலையரண்கள் - நிலவரண்கள் - கோட்டைகள் - காவற்காடு - அகழிகள்

**முன்னுரை**

புறத்தின் முதன்மைக் கூறு போர். தேவையின்பொருட்டோ, சுயநலம்சார்ந்தோ போர் நிகழ்தல் காலத்தின் எதார்த்தம். அவ்வகையில் போர் பற்றிய செய்திகளைத்தாங்கிய தகவல் களஞ்சியமாகத் திகழ்வது புறநானூறு. இதில் பல்வேறு மன்னர்களின் போரியல் வாழ்வு கூறப்பட்டிருக்கிறது. எதிரியின் தாக்குதலில் இருந்து தம்மைக் காத்துக்கொள்ள அமைத்துக்கொள்ளப்படும் பாத்துகாப்பே அரண் ஆகிறது. அத்தகைய அரண்கள் பற்றிய செய்திகளை புறனாநூற்றின்வழி இக்கட்டுரையில் காண்போம்.

**இலக்கியங்கள் கூறும் அரண்கள்**

“மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம” என்பது தமிழர்களின் அரசியல் கொள்கையாகும். அரசனைப் பாதுகாக்கும் காவல்களுள் அரணும் ஒன்று.

“முழுமுத லரணம் முற்றிலும் கோடலும்
அனைநெறி மரபிற் றாகும் என்ப” (தொல்.புறம்-10 )

இங்கு முழுமுதல் அரணாவது மலையும் காடும், நீரும் அல்லாத அகநாட்டுச் செய்த அருமதில், வஞ்சனை பலவும் வாய்த்துத் தோட்டி முள் முதலியன பதித்த காவற்காடு. அதனை அடுத்த கிடங்கு / அகழி. யவனர் இயற்றிய பல பொறிகளும், வாயிற்கோபுரமும், எந்திரங்களும் பொருந்த

இயற்றப்பட்டது என இளம்பூரணர், நச்சர் விளக்கம் தருகின்றனர். தொல்காப்பியச் செய்தியை வழிமொழிவதாக பதிற்றுப்பத்தும் அரண்களைப் பற்றிய குறிப்புகளைத் தருவதோடு, “வானுற ஓங்கிய வனைந்துசெய் புரிசை” என்னும் தொடரில் குறிப்பிடப்படும் புரிசை என்ற சொல் கோட்டையை உடைய பெருநகரைக் குறித்து வந்தது. திருக்குறளிலும் அரண் பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ளன.

**அரண்கள் அமைப்பும் வகையும்**

மன்னர்களின் ஆட்சிக்காலம் சிறப்பிடம்பெற வேண்டுமாயின் அவர்களின் பாதுகாப்பு இன்றியமையாததாகும். அவர்களைப் பாதுகாக்கும் அரண்கள் முற்றுகையினாலோ, போரினாலோ, சுழ்ச்சியினாலோ, பகைவர்களாலோ கைப்பற்ற முடியாத சிறப்புடையதாக இருக்க வேண்டும். மன்னரைப் பாதுகாக்கும் அரண்களை இயற்கை அரண்கள், இயற்கை – செயற்கை அரண்கள், செயற்கை அரண்கள் என மூவகைப்படுத்துவர்.

**இயற்கை அரண்கள்**

ஒரு நாட்டினைச் சுற்றியோ அல்லது ஒரு கோட்டையினைச் சுற்றியோ காணப்படும் இயற்கை வளங்களைத் தம் நாட்டின் பாதுகாப்பு அரண்களாக அமைத்துக்கொள்ளும் முறையை இயற்கை அரண்கள் என்பர். ஒருநாட்டின் அரண்களாக மலைகள் (மலையரண்கள்), காடுகள் (காவற்காடு), ஆறுகள், நிலங்கள் (நிலவரண்கள்), கடல் முதலானவற்றைப் பயன்படுத்தப் பட்டதை தமிழிலக்கியங்கள் மூலம் அறியலாம்.

**மலையரண்கள்**

தமிழகத்தின் மிகச்சிறந்த பாதுகாப்பு அரண்களாக கிழக்குத் தொடர்ச்சி மலையும், மேற்குத்தொடர்ச்சி மலையும் அமைந்துள்ளன. சிற்றரசர்கள் முதல் பேரரசர்கள் வரை மலைகளில் கோட்டைகளைக் கட்டி ஆட்சி புரிந்துள்ளனர். பாரியின் பறம்புமலையினை மூவேந்தர்களும் முற்றுகையிட்டபோது பறம்புமலைக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை என்பதை,

“ஒன்றே சிறியிலை வெதிரி னெல்விளை யும்மே
இரண்டே தீஞ்சுளைப் பலவின் பழமூழ்க் கும்மே
மூன்றே கொழுங்கொடி வள்ளிக் கிழங்குவீழ்க் கும்மே” (புறம்-10 9)

“முந்நூ றூர்த்தே தண்பறம்பு நன்னாடு” (புறம்-110 )

முந்நூறு ஊர்களை உடைய பறம்புநாடு பலவிதமான கனிகள், கிழங்குகள், தேன் முதலிய வளங்களை உடையதாக மலை இருந்ததால் பகைவர்களின் தாக்குதலால் எவ்வித பாதிப்பும் ஏற்படாமலிருந்ததாக புறநானூறு கூறுகிறது. அளவற்ற வளங்கள் எதிரியிடமிருந்து நாட்டை பாதுகாக்க உதிவின என்பதை அறிய முடிகிறது.

**நீர் அரண்கள்**

நீரும் ஒரு நாட்டிற்குச் சிறந்த அரணாகும். ஆழமான ஆறும், கடலும் சில கோட்டைகளின் அரண்களாகக் காணப்பட்டன. இவ்வகையில் இயற்கையாகவே நீர் சூழ்ந்த அரண்கள் தமிழகத்தில்

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

குறைவாகவே காணப்பட்டன. முப்புறமும் கடல் சூழ்ந்த தமிழகம் சிறந்த நீர் அரண்களைக் கொண்டு விளங்கியது எனக் கூறிக்கொள்ளலாம்.

**மிளை அல்லது காவற்காடு**

மிளை என்பது நாட்டின் புறத்தே இயற்கையாகவே அமைந்திருக்கும் அடர்ந்த காடுகளைக் கொண்ட ஒருவகை அரண் ஆகும். இது பகைவர்கள் எளிதில் கடந்து வரமுடியாதபடி தடுப்பு வசதிகளுடனும், அவர்களைத் திடீரெனத் தாக்கும் பொறி அமைப்புகளுடனும் அமைக்கப்பட்டிருக்கும். மிளை என்பதை, "கடிமிளை" (புறம்:21), "அருமிளை" (பதிற்று.9ஆம் பாடல்), "அருங்குழு மிளை" (மதுரை.64), "வருமிளை" (சிந்தா.1142) என்று பல இலக்கியங்கள் கூறுகின்றன. "கதிர்நுழை கல்லா மரம்பயில் கடிமிளை" (புறம்.2) எனும் வரிகள் மிக உயரமான அடர்ந்த மரங்களும், முட்புதர்களும் சூரியக் கதிர்கள் உள்ளே நுழையாதபடி பகலிலேயே அச்சத்தைத் தரக்கூடிய அடர் இருள் சூழ்ந்த காடு எனப் பொருள் கூறுவதை வைத்துப் பார்க்கும்போது காட்டின் பாதுகாவல் நன்றாகப் புரிந்துகொள்ள முடிகிறது.

காவற்காட்டினுள் நுழைய ஆங்காங்கே சிறிய வாயில்கள் காணப்படும். எதற்குப் "புழை" என்று பெயர். போர் தொடங்கும்முன் இவ்வாயில்கள் கவைமுள்ளினால் அடைக்கப்படும். இதனை,

"செலவ சைஇய மறுக்கு எம்பினின்
இனநன் மாச்செலக் கண்டவர்
கவைமுள் ளிற்புழை யடைப்பவும்" (புறம்.98)

"திங்களும் நுழைய வெந்திரப் படுபுழை" (புறம்.177)

எனும் வரிகள் உணர்த்துகின்றன.

**இயற்கை – செயற்கை அரண்கள்**

இயற்கையான அரண்களின் துணைகொண்டு அதன்மேல் அமைக்கப்படும் செயற்கையான பாதுகாப்பினை இயற்கை – செயற்கை அரண்கள் என்கின்றனர். தமிழகத்தின் பெரும்பகுதிகளில் இயற்கையாகவே அமைந்த மலைகளின்மேல் மன்னிர்கள் செயற்கையாக கோட்டைகளைக் கட்டி தங்களைப் பாதுகாத்துக் கொண்டனர். இவகையரண்களைத்தான் இயற்கை – செயற்கை அரண்கள் என்றனர். திண்டுக்கல், நாமக்கல் முதலிய மாவட்டங்களில் உள்ள மலைக் கோட்டைகள் சிறந்த கோட்டை அரண்களாக விளங்கின. மலைகளை இணைத்துக் கட்டப்பட கோட்டைகளே சிறந்த அரண்களாக விளங்கின. இவ்வகைக்குச் சங்க இலக்கியத்தில் சான்றுகளில்லை.

**செயற்கை அரண்கள்**

இவ்வகை அரண்கள் மனித முயற்சியால் உருவாக்கப்படுபவை. இவற்றுள் அகழிகள், கோட்டைகள், பொறிகள் முதலியவை அடங்கும். காவற்காடுகளில் ஏற்படுத்தப்படும் புதைகுழிகள், தாக்கும்பொறிகள், எந்திரப்புழை முதலியனவும் இதில் அடங்கும்.

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

**அகழி அல்லது கிடங்கு**

இயற்கையான நீர் அரண்கள் இல்லாத இடங்களில் செயற்கையான நீர்நிலைகளை அரண்களாக அமைத்துக்கொள்ளும் வழக்கம் தமிழர்களிடையே இருந்தது. இவற்றை அகழி எனவும் கிடங்கு எனவும் அழைக்கின்றனர். அதனை,

“மணிநீர்க் கிடங்கு” (மதுரை.351), “கல்லகழ் கிடங்கு” (மலை.90 -91), “குண்டகழி” (புறம்.18) எனும் இலக்கியங்கள் விவரிக்கின்றன. இவ்வகை அகழி கல்தரையைப் பிளந்து ஆழமாக அமைக்கப்பட்டது. மேலும், அவை நீர்வரும் வாயில்களைக் கொண்டிருந்தன. அகழியின் இலஞ்சிகளின் (மடு) ஆழமான பகுதியிலுள்ள முதலைகள், இரவில் காவல் புரிவோர் கையிலுள்ள தீப்பந்தத்தின் நிழல் நீரில் விழும்போது அந்நிழலையும் இரைஎனப் பாய்ந்து கவ்வும் இயல்பை உடையன என்பதை,

“இடங்கருங் குட்டத் துடன்று எக்கோடி
யாமங் கொள்பவர் சுடர்நிழற் கதூஉம்
கடுமுரண் முதலைய நெடுநீ றிலஞ்சி....” (புறம்.37)

**கோட்டை மதில் அரண்கள்**

கோட்டைக்குரிய அங்கங்களில் சிறந்தது மதில். ஒரு நாட்டிற்கு அதன் மதில்தான் சிறந்த அரணாக விளங்கும். கோட்டை மதிலினை இலக்கியங்கள், இஞ்சி (புறம்.34), “புரிசை” (புறம்.17,224), எயில் (புறம்.3,6), நொச்சி (தொல்.பொருள்). ஏழெயில் என்ற குறுநில மன்னனின் கோட்டையை, சோழன் நலங்கிள்ளி முற்றுகையிட்டான். ஏழு மதில்களால் அரண் செய்யப்பட்ட வலிய கோட்டையை எளிதாகக் கைப்பற்றிய நலங்கிள்ளியின் வீரத்தை வியந்து பாடினார் கோவூர்க் கிழார்,

“தென்னம் பொருப்ப என்னாட் டுள்ளும்
ஏழெயிற் கதவ மெறிந்துகைக் கொண்டுநின்...” (புறம்.33)

இக்காலத்தில் ஏழெயில் என்றஊர் “ஏழுபொன் கோட்டை” என அழைக்கப்படுகின்றது. எயில் எனும் பெயருடைய ஊர்களும் தமிழகத்தில் சிலவுண்டு. திவாரூருக்கு அருகே பேரெயில் என்று இருந்தான் ஓர் ஊர் பிற்காலத்தில் பெரெயிலூர் ஆயிற்று. இப்போது பேரையூர் என அழைக்கபடுகிறது.

**முடிவுரை**

பழந்தமிழர் வளங்கள், மிருகங்கள், இயந்திரங்கள் முதலானவற்றைத் தங்கள் வயப்படுத்திச் சிறந்த பாதுகாப்பு அரண்களாகப் பயன்படுத்திக் கொண்டனர்.கட்டிடக்கலையில் சிறந்து விளங்கிய தமிழர்கள் தங்கள் கோட்டை மதிலில் பல கருவிகளைப் பொருத்தியும், பல ரகசிய அம்பு ஏவும் அறைகளையும், கண்காணிப்பு அறைகளையும், பகைவர்கள் அறியாதபடி தாக்கும்வகையில் அமைத்துக்கட்டப்பட்ட பொறிகளையும் அமைத்து அரண்களை உண்டாக்கிஇருக்கின்றனர். தமிழர்கள் எந்த அளவிற்குக் காவல் அரண்கள் அமைப்பதில் கைதேர்ந்தவர்களாக இருந்தனரோ , அதே அளவிற்கு அதனை அழித்துக்கடந்து செல்வதற்கான ஆற்றலையும் பெற்றிருந்தனர் என்பதை

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

இலக்கியங்கள் தெரிவிக்கின்றன.

**துணைநூற் பட்டியல்**


1.**தொல்காப்பியம்** பொருளதிகாரம் **- இளம்பூரணர் உரை**
சாரதா பதிப்பகம்
சென்னை 14.

**2.மலைபடுகடாம் - சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,**
டி.டி.கே. சாலை,
சென்னை.

**3.பதிற்றுப்பத்து - சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,**
டி.டி.கே. சாலை,
சென்னை.

**4.புறநானூறு (மூலமும் உரையும்) - புலியூர்க் கேசிகன்**
சாரதா பதிப்பகம்
அண்ணா நகர்
சென்னை - 40

**5.மதுரைக்காஞ்சி (மூலமும் உரையும்) - புலியூர்க் கேசிகன்**
சாரதா பதிப்பகம்
அண்ணா நகர்
சென்னை - 40